DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ஸ்ரீதரன் (மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1) (P.w.25 ) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of June 2026

( எதிரி ஆஜர் . )

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது பழனியில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 10.12.2013ம் தேதியன்று அருப்புக்கோட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திருச்சுழி காவல் நிலைய குற்ற எண். 288/2013 வழக்கில் சம்பந்தப்பட்ட TN 23 P 2102 என்ற கனரக சரக்கு வாகனத்தை திருச்சுழி காவல் நிலைய காவல் ஆய்வாளரின் வேண்டுகோளின்படி எங்களது அலுவலக வளாகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த ஆய்வில் வாகனத்தின் டிரைவர் கேபினில் வலது புறம் சேதம் அடைந்திருந்தது. வலது முகப்பு விளக்கு உடைந்திருந்தது. வலது முகப்பு பகுதி சேதமடைந்திருந்தது. ஸ்டீரிங் காலம் உடைந்திருந்தது. வலது முன்புற

மெயின் லீப் ஸ்பிரிங் உடைந்திருந்தது. வலது முன்புற கார்னர் போஸ்ட், டிரைவர் டோர், டிரைவர் இருக்கை, வலது முன்புற வீல் ஆர்ச், வலது முன்புற கூரை சேதமடைந்திருந்தது. முன்புற வலது மற்றும் இடது முகப்பு கண்ணாடிகள் உடைந்திருந்தது. வாகனம் சேதமடைந்திருந்தால் தடை திறன் பரிசோதிக்க இயலவில்லை.

2. நிலையான சோதனையின்போது வாகனத்தின் தடை அமைப்பில் சேதம் எதுவும் இல்லை. வாகனத்தின் டயர்கள் நல்ல நிலையில் இருந்தன. எனவே அந்த வாகன விபத்தானது எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். **(அந்த TN 23 P 2102 என்ற கனரக சரக்கு வாகனத்தின் ஆய்வு அறிக்கை அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. இதே விபத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 67 N 0341 என்ற கனரக பயணிகள் பேருந்தை 13.12.2013ம் தேதியன்று காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின்படி எங்களது அலுவலக வளாகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். எனது ஆய்வில் வாகனத்தின் முன்புற பம்பரில் வலது புறம் சேதம் அடைந்திருந்தது. வலது முகப்பு விளக்கு உடைந்திருந்தது. வலது முகப்பு விளக்கை சுற்றிய பகுதி சேதமடைந்திருந்தது. வலது புற கார்னர் போஸ்ட், டிரைவர் டோர், வலது முதல், இரண்டாவது ஜன்னல்கள், வலது முன்புற வீல் ஆர்ச் சேதமடைந்திருந்தது. டேஸ் போர்டு, ஸ்டீயரிங் காலம், இன்ஜின் பானட், டிரைவர் இருக்கைக்கு கீழ் உள்ள பிளாட்பாம், வலது புறம் முதல் மற்றும் இரண்டாவது இருக்கைகள் சேதமடைந்திருந்தன. முன்புற வலதுபுற கூரை சேதமடைந்திருந்தது. முன்புற முகப்பு கண்ணாடி உடைந்திருந்தது. வாகனம் இயக்கி பார்க்க முடியாத அளவில் சேதமடைந்திருந்ததால் தடை திறன் பரிசோதிக்க இயலவில்லை.

2. நிலையான சோதனையின்போது வாகனத்தின் தடை அமைப்பில் சேதம் எதுவும் இல்லை. வாகனத்தின் டயர்கள் நல்ல நிலையில் இருந்தன. எனவே அந்த வாகன விபத்தானது எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். (**அந்த TN 67 N 0341 என்ற பேருந்தின் ஆய்வு அறிக்கை அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

1. லாரியை எனது அலுவலகத்திற்கு யாரும் ஓட்டி வரவில்லை என்றால் சரிதான். Recovery வாகனம் மூலம் கொண்டு வந்தார்கள். நான் பார்க்கும்போது அந்த லாரிக்கு வலது பக்க டயருக்கு மேல் Main Leaf Spring உடைந்திருந்தது என்றால் சரிதான். மேற்படி Main Leaf Spring அதிகபடியான எடையுடன் பள்ளம் மேடுகளில் ஏறி இறங்கினால் உடைவதற்கு வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. வலது வீல் ஆர்ச் சேதமடைந்தால் வாகனத்தை தாமாக நகர்த்த முடியாது என்றால் சரிதான். ஒரு பேருந்தில் அதன் முகப்பு கண்ணாடிக்கு 10 அடி துாரத்தில் ஒருவர் நிற்கும்போது மெதுவாக வந்த பேருந்தின் மீது எதிரே வந்த லாரி மோதினால் அந்த நபர் முகப்பு கண்ணாடி வழியே வெளியே விழ வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு குறைவு தான்.

2. வேகமாக வந்த பேருந்தில் முகப்பு கண்ணாடிக்கு சற்று அருகில் நின்றால் எதிரே மெதுவாக வந்த லாரி மீது மோதினால் அந்த நபர் முகப்பு கண்ணாடி வழியே வெளியே விழ வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. லாரியில் ஏற்பட்டுள்ள Main Leaf Spring மற்றும் வீல் ஆர்ச் ஆகியவை விபத்திற்கு முன்னேயும், அதிக எடையின் காரணமாக உடைய வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

**நீதிமன்ற கேள்வி –** பேருந்தில் நடுவே ஒரு நபர் நிற்கும்போது இரண்டு வாகனங்களும் வேகமாக வந்து மோதும் போது நடுவே நிற்கும் நபர் வெளியே விழ வாய்ப்பு உள்ளதா

**பதில் –** வாய்ப்பு உள்ளது.

**நீதிமன்ற கேள்வி –** வலது மற்றும் இடது பக்க டயர்களை இணைக்கக்கூடய அச்சில் ஏதேனும் சேதம் ஏற்பட்டிருந்ததா

**பதில் –** இல்லை.

**நீதிமன்ற கேள்வி –** லாரியின் வலது புற சக்கரத்தின் ஸ்டீயரிங் முடிவுப்பகுதி உடைந்திருந்ததா

**பதில்–** இல்லை.

**எதிரி தரப்பு மறு விசாரணை–**

பேருந்தில் முகப்பு பக்கத்தில் இருந்து வலதுபுறம் எவ்வளவு தூரம் சேதம் இருந்தது என்றால் 8 அடி தூரம் இருக்கும். லாரிக்கு எத்தனை அடி தூரம் சேதம் இருக்கும் என்றால் 4 முதல் 5 அடி தூரம் இருக்கும்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.